gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு கார்த்திகைமீ உருஉ (1946 டிசம்பர் 10 செவ்வாய்க்கிழமை) [இல சுகூ

# பதவி வேட்டை!

## சிலாபத் தேர்தலின் ஆபாசம்

மிஸ்ரர் ஜி. ஸி. எச். கொறியா இங்கிலாந்துக்குச் சென்றதும், அவர் வகித்துவந்த அரசாங்கசபை ஸ்தானத்துக்குரிய தேர்தல் நிகழவிருக்கிறது. இத்தேர்தலில் முதலியார் ஸி. ஏ அபயரத்தின, மிஸ்ரர் ஏ. எப். பீரிஸ் என்னும் இருவரும் அபேட்சகராக நின்று தேர்தற் பத்திரங்களைச் சமர்ப்பித்துவிட்டனர்! தேர்தலும் ஜனவரி மாதம் 18-ந் திகதி நடக்கவிருக்கிறது.

குறித்த இரு அபேட்சகரும் மிஸ்ரர் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இவர்கள் ஒரே கட்சியில் நின்று இப்படிப் பரஸ்பரம் மாறுபட்டு நிற்பது கட்சி ஒழுங்குக்கு முரணானது இப்போதே இப்படியென்றால், இன்னும் சிலகாலத்திலே இக்கட்சியின் நிலை என்னாகும் என்று மிஸ்ரர் சேனநாயக்கா யோசிக்கலாயினர். சிலாபத்துக்கு ஓடினார். அங்கே குறித்த இரு அபேட்சகர்களையும் கண்டார். ஒருவர் போட்டியிடக்கூடாது என்று வேண்டினார். இருவரும் பிடிவாதமாக நின்றனர். அதாவது, ஒருவர் அரசாங்க சபைப் பிரதிநிதியாகப் போவது மற்றவர்க்குச் சகிக்கவில்லை.

இந்த அழகில் தன்னுடைய கட்சி சிலாபத்தில் நடைபெறுவதைக்கண்ட மிஸ்ரர் சேனநாயக்கா இருவரையும் அரசாங்கசபைக்குப் போகவேண்டாமென்று கேட்டுக்கொண்டார். அரசாங்கசபை கலைக்கப்பட இன்னும் மிச் சில மாதங்கள்தான் உண்டு. அங்கே போயும் பயனில்லை. ஆகவே, ஜனவரி 18-ம் தேதி வழக்கமாகத் தேர்தல் முடிந்ததும், ஒருவர் அதிக வாக்குச் சம்மதங்கள்பெற்றால் அவர் உடனே அதனை வேண்டாம் என்று விலகிவிடவேண்டும். அடுத்தபாராளுமன்றத் தெரிவில், இந்த இரண்டு பேருக்கும் சிலாபத்திலே அதிகதொகுதிகள் அமைக்கப்படுவதால், தனித்தனி தொகுதிகள் கொடுக்கப்படும். இந்த ஒழுங்கினை மிஸ்ரர் சேனநாயக்கா செய்ய, குறித்த இரு அபேட்சகரும் ஒத்துக்கொண்டனர்.

ஐக்கியதேசியக்கட்சி என்று பெயரை வைத்துக்கொண்டு ஏதோ தேசசேவை செய்யப் புறப்படும் தேசாபிமானிகளின் உதாரணம்தான்மேலே காட்டிய இரண்டு அபேட்சகரும் கேவலம் பட்ட வேட்டையும் பதவி மோகமும் லட்சியமாயுள்ள அரசியல் வாதிகளே, இனியும் இலங்கையின் பரிபாலனத்தை மேற்கொள்வதென்றால், இந்நாட்டுக்கு விமோசனம் சமீபத்திலில்லை.

## 2 படி அரிசி!

### அடுத்த ஆண்டுடன் கிடைக்குமா?

இப்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி விஷயமாக லண்டன் அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்குமிடையே கடிதப் போக்குவரத்துகள் நிகழ்கின்றன.

இலங்கை மக்கள் சுகசீவிகளாக வாழவேண்டுமானால், குறைந்த பட்சம் அரிசிவிநியோக அளவு கிழமைக்கு 2 படியாகவாவது இருக்கவேண்டும் என்பதை இலங்கை அதிகாரிகள் வற்புறுத்திபதாகத் தெரிகிறது.

இலங்கையதிகாரிகளுடைய கோரிக்கைகளுக்குச் சாதகமாக முடிவு ஏற்படுமானால், அடுத்த ஆண்டு தொடக்கம் அரிசி விநியோக அளவை, 2 படியாக்கலாம் என்று அதிகாரிகள் பூரணமாக நம்புகின்றனர்.

# அப்பர் கண்ட ஐயாறு

(வித்துவான், வை. குஞ்சிதபாதம்பிள்ளை, சென்னை)

(முற்றொடர்)

இங்ஙனஞ் சூழ்ந்துள்ள பத்தர்களிடையே வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும் தெள்ளு பேரொளிப் பவளமால்வரை போல் இடப்பாகம் மலைமகளுடன் கூட வீற்றிருந்த வள்ளலாரை வாக்கின் மன்னவனார் முன்கண்டார்; கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்து பருகினார்; கைகூப்பித் தொழுது விழுந்து எழுந்து உடல் நடுங்கி ஆடிப்பாடி அழுதார்; தொண்டனார்க்குத் நிகழ்ந்த அனுபவநிலையை யாவரே கூறவல்லார்?

சொல்வேந்தர் தொழுது தாண்டகம் பாடி நிற்க, கயிலை நாதர் தாம் உமையுடன் வீற்றிருந்தருளிய கோலத்தைச் சேயதாக்கினர். அதுகண்ட அப்பர் மையல்கொண்டு உளம்மகிழ்ந்திட வருந்தி, “இங்ஙச் செய்யவேணியர் அருளிதுவோ” எனத் தெளிந்து உவகம் உய்ந்திடத் தாம் கண்டகாட்சியை,

> ‘மாதர்ப்பிறைக் கண்ணி யானை
> மலையான் மகளொடும் பாடிப்
> போதொடு நீர்சுமந் தேத்திப்
> புகுவா ரவர்பின் புகுவேன்
> யாதுஞ் சுவடுப டாமல்
> ஐயா றடைகின்ற போது
> காதன் மடப்பிடி யோடுங்
> களிறு வருவன கண்டேன்
> கண்டே னவர்திருப் பாதங்
> கண்டறி யாதன கண்டேன்.’

என்று பதிகம் பாடிப் பரவினர். இப்பதிகத்திலுள்ள ஏனைய பத்துப்பாடல்களிலும் கோழியும், குயிலும், சேவலும், மயிலும், பகன்றிலும், ஏனமும், கலையும், நாரையும், கிளியும், ஏறும் தத்தம் துணையுடன் கூடிச் சிவமும் சத்தியுமாய்க் காட்சியளித்ததைக் குறிக்கொண்டு பாடியுள்ளார்! பின்னர்த் திருத்தாண்டகம் திருக்குறுந்தொகை, திருநேரிசை, பழந்தக்கராகம் முதலிய பண்களமைந்த தேவாரப் பதிகங்கள் பாடி, அண்டர்பிரான் வீற்றிருக்கும் ஐயாற்றில் நாவரசர் அமர்ந்திருந்தார். ஐயாறுடை அடிகள் மீது அப்பர் பாடியனவாக இப்போது நமக்குப் பன்னிரண்டு பதிகங்கள் கிடைத்துள்ளன.

இதுவரையுங் கூறியதிலிருந்து, அப்பர் சுவாமிகள் தென் கயிலையாகிய காளத்தியை வணங்கி வடகயிலையில் இறைவன் வீற்றிருக்குங் கோலத்தைக் காண விரும்பி, உலையாமுயற்சியோடும் இடையறு அன்போடுங் காலால் நடந்து சென்று, உடலுறுப்புக்களெல்லாந் தேயவும் உடலால் உருண்டுசென்று செயலற்றுக் கிடக்க கயிலை நாயகர் ஒரு முனிவராய்த் தோன்றி, “தேவர்களுங் காண்டற்கரிய கயிலையை நீர் காண இயலாது மீள்க” எனவும், அப்பர் ‘ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால், மாளும் இவ்வுடல்கொண்டு மீளேன்” என மறுக்க, இறைவன் நாவரசரை நல்யாக்கையுடன் எழச்செய்து, தாம் தோற்றுவித்த தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காண்பாயாக என்றருள அங்ஙனமே மூழ்கி ஐயாற்றில் ஒரு தடாகத்தில் எழுந்து இறைவன் அம்மையப்பராய் ஒருங்கு வீற்றிருக்குங் கயிலைக்காட்சியைக் கண்டு களித்துச் சராசரங்களெல்லாம் சத்தியும் சிவமுமாய்த் துணையுடன் தோன்றிக் காட்சியளித்ததைக்கண்டு மகிழ்ந்து பதிகம்பாடிட அப்பரடிகள் ஐயாற்றில் அமர்ந்திருந்தாரென்பதும், முதலில் அப்பர்கண்ட ஐயாறு கயிலையே என்பதும் நிறவும் விளங்கும்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# பழைய படி!

## மா அரை இருத்தல்

மா வரவு தாமதப்பட்டபடியினால், இப்போது சில நாட்களாக விநியோகிப்கப்பட்ட மா அளவு மீண்டும் அரை இருத்தலாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இந்தக் குறைவைச் சரிப்படுத்துதற்கு அரிசி அளவு கூட்டிக் கொடுக்கப்படவில்லை. ஒருபடி அரிசிதான் கொடுக்கப்படுகிறது,

வருகிற 16-ந் திகதி 6000 தொன் பர்மா அரிசி இலங்கைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைவிட, இம்மாத முடிவிற்குள் பிரேஸிலில் இருந்து 17000 தொன் “கண்ணாடி” அரிசியும் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது

இன்னுஞ் சில தினங்களில் 8000 தொன் மாவுடன் அவுஸ்திரேலியாவிலிருந்து ஓர் கப்பல் இங்கு வருமாம்

இப்படியே கப்பற் கதைகள் கூறி எங்கள் காருண்ய அரசாங்கம் இந்த இலங்கை மக்களை இந்த நிலையில் வைத்திருக்கிறது ஆனால் அயல் நாடாகிய இந்தியாவிலே காங்கிரஸ் பரிபாலனஞ் செய்யும் மாகாணங்களிலே, இப்போது முன்னரிலும் பார்க்கக்கூடிய அளவுஉணவுப்பொருள்களை அரசாங்கம் கொடுத்துதவுகிறது அங்கே விவசாயிகள் அரசாங்கத்துடன்பூரணமாக ஒத்துழைப்பதனால், மாதந்தோறும்லட்சதொன் கணக்கில் நெல் முதலாம் தானியங்கள் அரசாங்க் கழஞ்சியத்துக்குச் சேருகிறது ஆனால், இந்த இலங்கையில், அரசாங்கத்துக்கும், விவசாயிகளுக்குமிடையே ஒத்துழைப்பு மருந்துக்குங் கிடைக்காது. அரசாங்க கழஞ்சியத்துக்குச் சேரவேண்டிய நெல் பிறவிடங்களுக்குப் போகிறது. இதற்கு மூலகாரணர் மிஸ்ரர் சேனநாயக்காதான். இன்று சோரமாக நெல் விற்கப்படுகிற தென்றால், அதன்பொருட்டு ஊரவர் புசல் ஒன்றுக்கு முப்பது ரூபாவரை கொடுக்கிறார்களென்றால், அதற்கு மிஸ்ரர் சேனநாயக்காவின் தீர்மான விவசாயக் கொள்கைதான் காரணம்.

# பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம்

## ஒரு நாளைக்குப் பின் வேலைக்குத் திரும்பினர்

சென்ற ஞாயிற்றுக்கிழமை, வலிகாமம் மேற்கு பஸ் கம்பனியைச் சேர்ந்த கண்டக்ரர்கள், சாரதிகள், பரிசோதகர் என்பவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

இப்போது சிலகாலமாக ஷெ பஸ் கம்பனிக்கும், அதன்கீழ்க் கடமை பார்க்கும் தொழிலாளர்க்குமிடையே வேற்றுமை ஏற்பட்டது என்றும், சென்ற சனிக்கிழமை, ஷெ பஸ் கம்பனி தனது பரிசோதகர் சிலரை வேலையினின்றும் நீக்க அறிவித்தல் கொடுத்ததென்றும், அதன் பயனாக மற்றும் தொழிலாளரும் வேலைநிறுத்தம் செய்தனர் என்று தெரிகிறது.

நிலைமை மோசமாகி விடமுன், வடமாகாணத் தலைவர் ஸ்ரீ சி. குமாரசுவாமி, பொலிஸ் அதிகாரிமிஸ்ரர்ஒஸ்மன். டீ, சில்வா என்னும் இருவரும் இவ்விஷயத்தில் தலையிட்டு ஓர் சமரசத்துக்கு முயற்சி செய்தனர். அவர்கள் செய்த முயற்சியின் பயனாக தாம் பரிசோதகர்க்குக் கொடுத்த வேலைநிறுத்த அறிவித்தலை, இதற்கென நியமிக்கப்படும் ஓர் விசாரணைச்சபை இருபக்க வாதங்களையும் ஆராய்ந்து ஓர் தீர்ப்புக் கூறும்வரை, தவிர்ப்பதற்கு பஸ் கொம்பனியார் உடன்பட்டனர். இதற்கு பஸ் தொழிலாளரும் சம்மதித்து அன்றுமாலை வேலைக்குத் திரும்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் வியஹு
கார்த்திகை ௨௫ செவ்வாய்க்கிழமை

## நினைத்ததொன்று நிகழ்வது பிறிதொன்று

உலகத்தின் இரண்டாம் மகாயுத்தம் நேர்ந்த காலத்திலே, பலவகையான பஞ்சங்களும் கஷ்டங்களும் மக்களைப் பாதித்துக் கொள்ள, மக்களாயுள்ளார், யுத்த காலத்திலே, வேறுசெய்வதற்கு வகையில்லாமையினால் அப்பஞ்சங்களையும் கஷ்டங்களையும் பட்டுச் சகித்துக்கொண்டு, யுத்தம் ஒழிந்தபின் அப்பஞ்சங்களும் கஷ்டங்களும் மெல்லமெல்லத் தாமாகத் தங்களை விட்டகலு மென நினைத்துச் சிறிது மனஆறுதலோடு காலம் போக்கினார்கள்; இரண்டாம் மகாயுத்தம் ஒழிந்தும் ஒன்றரை ஆண்டு கழிந்து விட்டது; ஆனால் மக்கள் நினைத்திருந்த வண்ணம் எதிர்பார்த்தபடி ஏதும் நடக்கவில்லை; உண்மையை உற்றுராய்ந்து பார்க்கில், யுத்த காலத்திலே நேர்ந்த பஞ்சம் பசி கஷ்டங்களைக்காட்டிலும், யுத்தம்முடிந்த காலமாகியஇக்காலத்திலவை அதிகப்பட்டு வரலாயின; யுத்தகாலத்திலே உணவுக் கட்டுப்பாடு உண்டெனினும், இங்குள்ள மக்கள் அதிகங் கஷ்டப்படாத வண்ணம், அதிகாரிகள் உணவுப் பொருள்களைப் பங்கிட்டு உதவி வந்தார்கள்; உடை விஷயத்திலும் அதற்காகிய 'கூப்பன்' களைக் காலந்தோறும் சனங்களுக்கு வழங்கி, அவர்கள் காலந்தவறாது அதிகவிலை கொடுத்தேனும் உடையைப் பெற்று ஒருவாறு உடுக்க வைத்தார்கள் அதிகாரிகள்; இப்படியே மக்களின் வாழ்க்கைககு இன்றியமையா ஏனைய பொருள்கள் விஷயத்திலும் அதிகாரிகள் செய்துவந்தார்கள். மேலும், அக்காலத்தில் இங்குள்ள மக்களுட் பல்லாயிரக் கணக்கானோர், இராணுவத்திலும் இராணுவத்திற் குரியனவாகிய ஸ்தாபனங்களிலும் தொழில் பெற்றுத் தக்கமாச வேதனத்தையும் பெற்று வந்தார்கள்; பணவருவாய் அதிகம் அக்காலத்தி லிருந்தமையினால், அக்காலத்தில் நேர்ந்த பொருட்பஞ்சம் மக்களை அதிகமாக உபாதிக்கவில்லையாகும்.

ஆனால் இப்பொழுதெனிலோ, இராணுவமும் இராணுவத்திற்காகிய பல ஸ்தாபனங்களும் அகற்றப்பட்டு விட்டமையினால், சமயோசிதமானஉத்தியோகமுந் தொழிலும் பார்த்துப் பணமீட்டிய பல்லாயிரக் கணக்கான மக்கள் தொழிலற்றூராய்த் தத்தம் வீட்டிற்கு மீண்டுவந்து சும்மாவிருக்கின்றனர்; இப்படி மீண்டு வந்தவர்களுட் பாமரராகிய பலர் களவு முதலிய தீய முறைகளாற் பொருளீட்டத் தலைப்பட, நாட்டிலே சமாதானத்தோடும் வாழும் நன் மக்களுக்குப் பெருங்கேடு செய்வா ராயினர்; பலர் தாம் முன்செய்யாத கூலிவேலைகளைச் செய்து மரியாதையோடு வயிறு வளர்க்கின்றனர்; இன்னும் சிலர் முந்தி நல்லா யிருந்தவர்கள் இப்பொழுது இப்பஞ்சங்காரணமாக வருவாய் செலவிற்குப் போதப் பெருதவர்களாய்க் கேடடைந்து இடையிற் கிடந்து இடர்ப்படுகின்றனர்; இப்படி இங்குள்ள மக்கள் பலவகையாலும் துன்பப்படுகின்றதாகிய இந்தச் சமயத்திலே, வறுமைப் பிணி மக்களைப் பீடித்து வருத்தும் இந்தவேளையிலே, உணவுப் பொருள்கள் உடைப் பொருள்களின் கட்டுப்பாட் டதிகாரிகள், குறித்த உணவுப் பொருள்களையும் உடைப் பொருள்களையும் மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க முடியாது சங்கடப்படலாயினர்; சுருங்கச் சொல்லுகில் யுத்தம் நடந்த காலத்திலே வேற்றுநாடுகளிலிருந்து இந்நாட்டில் வந்து சேர்ந்த உணவுப்பொருள் விகிதமும் உடைப்பொருள் விகிதமும் பெரிதுங் குறைந்துவிட்டன; குறைந்தமையோடு மாத்திரம் அமையாது கிரமமும் அற்றுவிட்டன; இலங்கைக் கென முந்தி உணவுப் பொருள்களையும் உடைப் பொருள்களையும் இயன்றவரை அதிகமாக அனுப்பிவந்த வேற்றுநாட்டு மக்கள் இப்பொழுது அங்ஙனம்அனுப்பி வைக்க மறுத்து, தம் உணவு உடைப் பொருள்களை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து வருகின்றனர்; காரணம் இந்தச் சீர்கெட்ட சிங்கள அதிகாரிகள் சில வருடங்களாக இந்தியர் முதலாம் வேற்றுநாட்டினரைப் புறக்கணிக்கத் தலைப்பட்டமையினாலேயே இலங்கை மக்களுக்கு இந்த அதோகதி நேரலாயிற்று என்பதை இங்குள்ளார் எவரேனும் மறுத்தல் முடியாது.

இனி, இங்குள்ள மக்களெனிலோ தங்களுக்கு நேர்ந்த இன்னல்களை எடுத்து முறையிட்டு நீக்குவதற்குத் தஞ்சமான தலைவர்க ளில்லாமையினால் ஆரோடு நோவோம் ஆர்க்கெடுத் துரைப்போ மென்று புலம்பிக் கலங்குகின்றூர்கள்; இலங்கையிலே தலைவர்க ளென்றிருப்பவர்க ளெனிலோ, இங்குள்ள மக்களின் பஞ்சம் பசி உடையின்மை யென்னுமிவைகளைப் பொருட்படுத்தாது, அகற்றுதற் காகிய முயற்சியேதுஞ் செய்யாது, விரைவில் வரவிருக்கும் பாராளு மன்றத்திற் பிரதிநிதிகளாதற்கு அபேட்சை கொண்டவராய், ஒவ்வொரு சாதியினரும் தத்தமக்குள் மாறுபட்டு ஒருவரையொருவர் ஏசியும் கண்டித்தும் தூற்றியும் கருமம்பார்க்கத் தலைப்படுவரென நினைக்கக் கிடக்கின்றது; இவர்கள் இப்படிச் செய்யத் தலைப்படுவரேல், ஒரு செறிவில் நிற்கும் மூங்கில்கள் காற்றினால் மோதுண்டு ஒன்றோ டொன்று உரோஞ் சுண்ண, அதனால் தீ மூள அத் தீவாய்ப்பட்டு அனைத்தும் அழிந்தொழிதல் போல, தாங்களும் தங்கள்சாதிப் பெருமையும் தொன்மையும் கெட்டு வலிகுன்றி அந்நியராகிய வலியுடையார்க் கடிமைகளாய் இன்னும் இடர்ப்பட நேருமென்பது நிசம்.

# இந்திய அரசியல்

### எதிர்பார்த்ததுதான்!

நாம் ஏற்கெனவே கூறியபடி லண்டன் மகாநாடு எவ்வித பயனையும் அளிக்காமல் முடிவடைந்து விட்டது. பண்டித ஜவஹர்லால் நேருவும், சர்தார் பல்தேவ்சிங்கும் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டார்கள் முன்னேற்பாட்டின்படி, அரசியல் நிர்மாணசபையின் ஆரம்பக் கூட்டம் நேற்றையதினம் புதுடெல்கியில் நிகழ்ந்தது. முஸ்லிம் லீகர்களைவிட, ஏனைய பிரதிநிதிகள் யாவரும் கூட்டத்துக்குச் சமுகமளித்தனர்.

●

### பாபு ராஜேந்திரப் பிரசாத்

அரசியல் நிர்மாணசபையின் தற்காலிக தலைவராக டக்டர் சச்சிதானந்த சின்ஹா அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் நேற்றைய கூட்டத்துக்குத் தலைமை வகித்து ஆரம்ப நிகழ்ச்சிகளை நடத்தினர். அதன்பின் நிரந்தரமான தலைவர் தெரிவு நிகழ்ந்தது. இப்போது இடைக்கால அரசாங்கத்தில் உணவு மந்திரியாகவுள்ள பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்களே ஏகமனதாகத் தலைவராகத் தெரியப்பட்டார்.

●

### லீகர் நிலை என்ன?

முஸ்லிம்லீகரும், பிரிட்டிஷ் அரசாங்கமும் இனிச் செய்யப்போவது என்ன என்பதை அகில உலகமும் அவதானித்து வருகிறது. நேரடிப் போராட்டம், ஒத்துழையாமை என்ற பதங்களை முஸ்லிம் லீகர் பேச்சளவில் வைத்துக்கொள்ளுவரன்றி நடைமுறையிற் பிரயோகிக்கமாட்டார்கள் என்பது டகிரங்கமாகிவிட்டது. காங்கிரஸ் மகாசபை 60 வருஷ காலமாகச் சத்தியாக்கிரகப் போராட்டம் செய்தது. இந்த 60 ஆண்டு காலத்தில், அது அதிகாரவர்க்கத்தோடு மாத்திரம் போர் புரிந்ததேயன்றி, பாரத மக்களுக்கு எத்தகைய இன்னலும் விளைக்கவில்லை அப்படியான போராட்டத்தை ஆற்றுதற்கு முஸ்லிம் லீகர்க்குத் தெரியாது. அவர்களுடைய போராட்டம் பலாத்காரத்திலேயே கொண்டு போய் விடும். அப்படியான பலாத்காரத்தைச் செய்ய, இப்போது முஸ்லிம் லீக்கினர் ஒன்றுக்கு நூறு தரம் யோசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பீகார் அவர்களுக்கு நல்ல பாடம் படிப்பித்துவிட்டது. வாளை எந்தி, ஹிந்துக்களைத் தாக்க லீகர் முன்வந்தால், அவர்களை எதிர்க்க ஹிந்துக்கள் பின்வாங்க மாட்டார்கள்; 30 கோடி ஹிந்துக்கள் 7 கோடி முஸல்மான்களின அட்டூழியத்தைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை ஹிந்து சமூகம் துலாம்பரமாகக் காட்டியிருக்கிறது. எனவே முஸ்லீம் லீக்கினர், மிஞ்சினால் கெஞ்சு என்ற நியாயத்தின்படி இன்னுஞ் சிலகாலத்தில் அரசியல் நிர்மாணசபையில், ஏதாவது ஓர் காரணத்தைச் சொல்லிக்கொண்டு சேருவாரானல் எவரும் அதிசயப்படத் தேவையில்லை.

●

### பிரிட்டிஷார் நிலை

மூன்றும்பேர்வழியான பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் இன்னும் இந்தியாவில் நிற்கிற பலத்தைக்கொண்டுதான் இன்று லீகர்கள் இத்தகைய கேடுபிடிக்கொள்கையைக் கையாளுகின்றனர். ஆனால் பிரிட்டிஷ் அதிகாரவர்க்கமும், எவ்விதத்தில் இந்த முஸ்லிம்லீக்கினர்க்கு உதவி செய்யப்போகிறது? காங்கிரஸ் இடைக்கால அரசாங்கத்தைக் கைப்பற்றி விட்டது. மாகாண அரசாங்கங்களையும் கைப்பற்றிவிட்டது. இவ்வளவுடன் மாத்திரம் நிற்கவில்லை. அயல்நாடுகளிலே இந்தியாவின் அந்தஸ்து மிகவும் உயர்ந்துவிட்டது. சகல விஷயங்களிலும் இந்தியாவை ஓர் சுதந்திர நாடாக உலக வல்லரசுகள் மதித்து நடக்கின்றன; ரூஷியாவின் நல்லெண்ணம் அதற்குப் பூரணமாக விருக்கிறது. இப்படியான ஓர் சூழ்நிலையில், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியா விஷயமாக நின்று தவிக்கிறது, பாரிய முள்ளைத் தொண்டையிற சிக்க வைத்த குள்ளநரிபோல அது விழிக்கிறது. எனவே, அது ஈற்றில், முஸ்லிம் லீக்கைப் புறக்கணித்து இந்தியப் பொதுமக்களிடம் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, மூட்டை முடிச்சுக்களுடன் கூடிய சீக்கிரத்தில் வெளியேறலாம். எது எப்படியிருந்தபோதிலும் முஸ்லிம் லீக்கின் கெடுபிடியும், பிரிட்டிஷ்இராஜதந்திரமும் இன்னும் அதிககாலத்துக்கு நில்லா. உலகம் போகிற வேகத்தில் இவை அந்த வேகத்தில் அகப்பட்டு நசிய வேண்டியதுதான்.

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

ஆங்கில கலாசாலைகளில் ஸ்கூல்பைனல் இண்டர்மீடியேட் ஸீனியர், பீ. ஏ. ஸீனியர் வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்காக 19 7-ம் வருஷம் மார்ச்சு மாதம் 8 ந் தேதியில் இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வழக்கம்போல நடத்தப்பெறும் ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைக்குவரும் மாணவர்கள், 1947-ம் வருஷம் ஜனவரி மாதம் 25 ந் திகதிக்குள்ளும், விய வருஷம பங்குனி மாசம் 25, 26, 27 (1947-ம் வருஷம் ஏப்ரல்மாசம் 7,8,9) நடத்தப்பெறும் தனித்தமிழ்ப் பரீக்ஷைக்கு வரும் மாணவர்கள் விய வருஷம் தைமாசம் 15 ந் திகதி (28—1—47) க்குள்ளும் விண்ணப்பப் பாரத்தையும் பரீக்ஷைக் கட்டணத் தொகையையும், இச்சங்கமாபீசு மானேருக்கு அனுப்பவேண்டு மென்றும், மேலே குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்பு வரலாகும் யாவும் அங்கீகரிக்கப்படமாட்டா வென்றும் இதன்மூலம் அறிவிக்கலாயிற்று.

☞ பரீக்ஷைக் கட்டணத்தொகை: மெற்றிக்குலேசன் அல்லது ஸ்கூல்பைனல் பரீக்ஷைக்கு ரூபா ஒன்று. இண்டர்மீடியேட் பரீக்ஷைக்கு ரூபா ஒன்றரை. பீ. ஏ. பரீக்ஷைககு ரூபா இரண்டு

குறிப்பு:— சென்னை யூனிவசிடியாரால் 1947-ம் வருஷப் பரீக்ஷைக்கு, பீ. ஏ ஸீனியர், இண்டர்மீடியேட் ஸீனியர், ஸ்கூல் பைனல் வகுப்புக்களுக்கு வைக்கப்பட்டுள்ள Detailed and Non-detailed தமிழ்ப்பாடங்களே சக்கப்பரீக்ஷைக்கும் பாடங்களாகும். இரண்டு அணா லேபில் அனுப்பினால் விண்ணப்பப்பாரம் இவ்வாபீசினின்றும் பெறலாம் என்று மதுரைத் தமிழ்ச் சங்கமானேஜர் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன், தெரிவிக்கின்றூர்.

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக் காரியதரிசி அவர்கள் பின்வருமாறு தெரிவிக்கின்றூர்கள்:—

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் குருபூசை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் வழமைபோல் 13 12-46 வெள்ளிக்கிழமை கீழே காட்டப்பெறும் கிரமப்படி நடத்தப்பெறும்.

நிகழ்ச்சிகள்:

மு. ப. 10 மணிதொடக்கம் 1 மணிவரை நீராவியடி திலகவதியார் மடத்தில் கடவுள் ஆராதனை தேவார பாராயணம் மாகேசுரபூசை.

இரவு 7 மணிதொடக்கம் 9 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீமத் ந. சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் தலைமையில திரு த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் "ஆறுமுகநாவலர்" என்னும் பொருள் பற்றிப் பிரசங்கஞ் செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாக்குகள் மர்மம்!

## தென் ஆபிரிக்காவுக்கு அனுப்புவது யார்?

தென் ஆபிரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே பிணக்கு ஏற்பட்டபின் அந்நாடுகளுக்கிடையே வர்த்தகத் தொடர்பு இல்லாமற் போய்விட்டது. இந்தியா தென் ஆபிரிக்காவுக்கு அனுப்பிவந்த பொருள்களில் சணற்சாக்கு (கோணிப்பை) பிரதானமானது. தனக்கு வேண்டிய சணற்சாக்குகளை எங்கே வாங்கலாம் என்று ஆராய்ந்து இந்த இலங்கைக்கும் தனது பிரதிநிதிகள் சிலரை தென் ஆபிரிக்கா அனுப்பியது. இவர்கள் இங்கே வந்ததன்பயனாக இச்சாக்குகள் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டு வந்தன. இவற்றை அங்கே அனுப்பியது யார்?

இந்தியாவிலே இலங்கையரசாங்கத்தின் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் M. W H, சில்வா என்பவர் இங்குள்ள இந்திய மக்களைக் குற்றம் சாட்டுகிறார். இலங்கையிலே சாக்கு வர்த்தகம்—அதாவது பழைய சாக்குகளை வாங்கித் திருத்திப் பின் அவற்றை ஏற்றுமதிசெய்யும் தொழில்—முழுவதும் இலங்கையில் வதியும் இந்தியர் கையிலேயே இருக்கிறது. இந்த இந்தியர்தான் தம் சுயநலங் கருதி, தென் ஆபிரிக்காவுக்குச் சாக்குகளை ஏற்றுமதிசெய்கிறார்களென்று மிஸ்ரர் சில்வா புதுடெல்கியில் ஓர் கூட்டத்திற் குறிப்பிட்டார்.

மிஸ்ரர் சில்வாவின் கூற்று இலங்கைவாழ் இந்திய மக்களிடையே பெரும் மனக்கொதிப்பைக் கொடுத்திருக்கிறது. 'கோடரி தன்னுளே மரமது புகுந்துதன் கோத்திரமெல்லாமழிக்கும' என்றபடிக்கு இந்திய மக்கள் ஒருபோதும் கருமம் ஆற்றவில்லை அவர்கள் கையிற் சாக்கு வியாபாரம் இருக்கிறபோதிலும், இலங்கையில் உள்ள சிங்கள வியாபாரிமாரும், சில ஐரோப்பியரும் சேர்ந்துதான் தென் ஆபிரிக்காவுக்குச் சாக்குகளை அனுப்பிவருகிறார்கள் என்று இந்தியவர்த்தகர் சங்கத்துத் தலைவராய ஸ்ரீ எச் எம் தேசாய் ஓர் அறிக்கையை வெளியிட்டு, புதுடெல்கியில் மிஸ்ரர் சில்வா விடுத்த கூற்றைப் பலமாகக் கண்டிக்கிறார்,

எது எப்படியிருந்தபோதிலும், இலங்கையரசாங்கம் இப்போது தென் ஆபிரிக்காவுக்குச் சாக்குகள் அனுப்புவதைச் சட்டபூர்வமாகத் தடுத்துவிட்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டை எவரும் பாராட்டத்தான் வேண்டும். இந்திய மக்களுக்கு நிறத்திமிர் பிடித்த தென்னாபிரிக்க வெள்ளையர் செய்யும் அநீதி இந்திய மக்களுக்கு மாத்திரமல்ல ஆசிய மக்கள் அனைவர்க்குமேயாகும். வெள்ளை நிறமுடையோர்தான் ஆளப் பிறந்தவர் என்ற அகம்பாவத்துடன் சர்வாதிகாரம் செலுத்தும் தென்னாபிரிக்கா அரசாங்கத்தின் அகங்காரத்தை அடக்கும் முயற்சியில் இயன்றளவாவது பங்கெடுக்க இலங்கைக்குச் சந்தர்ப்பம்கிடைத்திருப்பதுபற்றி எவரும் மகிழ்ச்சியடைய வேண்டியதாகும்

# எப்படி வந்தது?

## செல்வராகும் அரசாங்க உத்தியோகத்தர்!

யுத்தம் ஆரம்பமான காலத்திலிருந்து, அரசாங்கத்தில் இருந்த அநேக உத்தியோகத்தர்கள் பணக்காரராகிவிட்டனர் என்ற ஓர் எண்ணம் சரியாகவோ, பிழையாகவோ, இந்நாட்டு மக்கள் மனதிற் பதிந்துவிட்டது. இந்த விஷயத்தை லங்கா மகாஜன சபையார் இப்போது எடுத்திருக்கிறார்கள். ஷை சபையின 27-வது வருடாந்தக் கூட்டம் சென்ற சனிக்கிழமை கொழும்பில் நிகழ்ந்தது. அப்போது மிஸ்ரர் எச். டபிள்யூ அமரசூரியா என்பவரின் பெயரால் பின்வரும் கருத்துக்கொண்ட தீர்மானம் எடுத்தாளப்பட்டது:

"நடந்த 5 ஆண்டுகளில் லஞ்சம் பெறுதல் முதலாம் துர்ப்பழக்கத்தினால், பல அரசாங்க உத்தியோகத்தர் பெரும் செல்வராகிவிட்டனர். இவர்கள் பல வருஷகாலம் அரசாங்கத்திற் சேவை செய்தாலும் சம்பாதிக்க முடியாத அவ்வளவு பெருந்தொகைப் பணத்தை இந்த 5 ஆண்டு காலத்துக்குள் சம்பாதித்துவிட்டனர். இவர்கள் எப்படி இந்தச் செல்வத்தைச் சம்பாதித்தனர் என்பதை அறிவதற்காக ஓர் விசாரணைச் சபை நியமிக்கவேண்டும்".

## பாராளுமன்றத் தெரிவு

இலங்கைப் பாராளு மன்றத்துக்கான தெரிவு அடுத்த ஆண்டு ஜூன் மாசம் நிகழும் என முந்தி எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், வாக்காளர் அட்டவணையைத் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக, குறித்த தெரிவு ஜூலை, அல்லது ஆகஸ்ட்டு மாதத்தில்தான் நிகழும் என இப்போது தெரிகிறது.

## சேர். ஸீ பி இராமஸ்வாமிஐயர்

பிரபல இந்திய அரசியல்வாதியும், இப்போது திருவாங்கூர்ச் சமஸ்தானத்துப் பிரதம மந்திரியுமாகவுள்ள சேர். ஸீ பி. இராமஸ்வாமி ஐயர் அவர்கள், தம் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துவிட்டார். பதவியிலிருந்துகொண்டு, வருங்கால இந்திய அரசியற் பிரச்னைகள் விஷயமாகத் தமது சொந்த அபிப்பிராயங்களைக் கூறி, நாட்டுக்கு நன்மை செய்ய முடியாது. ஆகவே சுயேச்சையாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தின் பேரிலேயே அவர் தம் பதவியைவிட்டு விலகுகிறார்.

## ஸ்ரீமதி. விஜயலக்ஷ்மி

ஐக்கிய தேச ஸ்தாபனத்திலே இந்தியக் கோஷடியின் தலைவியாகவுள்ள ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி இன்று அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்கு மீளுவார்: அரசியல் நிர்மாண சபையிற் பங்கு பற்றிக் கொள்ளுதற்காகவே அவர் வருகிறார், அவருக்குப் பதிலாக, சேர். மகாராஜசிங் இந்தியக்கோஷ்டித் தலைவராக விருப்பர்.

# சிங்கள ராஜ்யம்!

## கொறியாவின் காரியாலயத்தில் பறக்குங் கொடி

மிஸ்ரர் கொறீயா இன்று லண்டனிலே இலங்கையரசாங்கத்தின் பிரதிநிதியாக விருக்கிறார். அவர் அதன் பொருட்டு ஆயிரக்கணக்கில் வேதனம் பெறுகிறார். இந்தப்பணம் ஒரு குழுவினரால், ஓர் கூட்டத்தாரால், அல்லது ஓர் கட்சியினரால் உதவப்படுவதில்லை. இந்த நாட்டில் வதியும் சிங்களர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் முதலாம் மக்கள் வரிப்பணமாக இறுத்த பொது அரசிறையிலிருந்தே அவருக்கு வேதனம் அளிக்கப்படுகிறது. அவர் அங்கே இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருக்கிறாரே யன்றி, சிங்கள மக்களின் பிரதிநிதியாகவோ, சேனநாயக்காக்குழுவினரின் ஏஜெண்டாகவோ இருக்கவில்லை என்பதையும், அவர் தமது உத்தியோக சம்பந்தமான கருமங்களுக்கு சிங்கள மக்களுக்கு மாத்திரம் பொறுப்பாளியல்ல என்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுதல்வேண்டும்.

இப்படிப்பட்ட இலங்கை மக்களின் ஊழியன் ஒருவருக்கு, அவருடைய காரியாலயத்தின் மீது பறக்கவிடுதற்காக, இலங்கை அரசாங்கம் சிங்களமக்களுக்குரிய சிம்ஹக்கொடி ஒன்றை அனுப்பியிருக்கிறது. இதன் அர்த்தம் என்ன என்று கேட்பதற்கு ஆளில்லையா? இந்த இலங்கையிலே சிங்கள ராச்சியம் உதயமாகிவிட்டதா? இன்று அமுலில் நடப்பது டொனமூர் அரசியல்: இன்னும் 6 மாதத்தின் பின் அமுலில் வரவிருப்பது சோல்பெரித்திட்டம். இந்த இரு திட்டங்களும் சிங்கள மக்களுக்காக, வேறெச் சாதியார்க்காக இன்னும் சுயராச்சியத்தைக் கொடுக்கவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வாலில் தொங்கும் ஓர் முறையைத்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் சேனநாயக்காக் கோஷ்டிக்கு வழங்கியிருக்கிறது. இதனைக் கண்டு மருண்டு, பூசைக்குமுன் சந்நதம் ஆடும் பைத்தியகாரிபோல சேனநாயக்காக் கோஷ்டி இப்போதே சிம்ஹக்கொடியை ஆரோகணிக்கத் தொடங்கிவிட்டது ஆனல் இத்தகைய செயல்களினல், மிஸ்ரர் சேனநாயக்கா இந்த இலங்கையை எங்கே கொண்டுபோக எத்தனிக்கிறார் என்பதைப் பரந்த நோக்கமுள்ள பல சிங்களத் தலைவர்களும் சிறுபான்மையினரும் அறியாமல் இல்லை.

## இலங்கை நஷ்டஈடு கேட்கிறது

இரண்டாவது உலக மகாயுத்தத்தில், ஜப்பானியா இலங்கைமீது குண்டு வீசியதாலும், துறைமுகத்திலிருந்த கப்பல்களைத் தாக்கியதாலும், இங்கே உணவுப் பொருள்களைக் கொண்டு வந்த கப்பல்களை நீர்மூழ்கிகளால் தாக்கியதாலும், இந்நாட்டுக்குப் பெருந் தொகையான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஈடு செய்யவேண்டும் என இலங்கை அரசாங்கம் ஜப்பானைக் கேட்டிருக்கிறது. நட்ட ஈட்டுத் தூதுக்கோஷ்டியில் இலங்கையின் சார்பாக மிஸ்ரர் ஜே. ஆர். ஹென்ஸ்மன் அங்கத்துவம் வகிப்பர்.

## ஆர்த்திரா தரிசனம்

மார்கழிமீ 22-ந் திகதி திங்கட்கிழமை இரவு அபிஷேகமும் 23-ந் திகதி செவ்வாய்க்கிழமை உதயம் தரிசனமும் கொள்ளற் பாலதாகும். திருக்கணித பஞ்சாங்க "உற்சவாதியில்" 24-ந் திகதி எனத்தவறுதலாகக் குறிக்கப்பட்டதை யிட்டுப் பச்சாத்தாப முறுகின்றேம். என்று மட்டுவில் திருக்கணித பஞ்சாங்க பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயரவர்கள் தெரிவிக்கின்றார்கள்

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்

ஷை சங்கத்தின் 22-வது ஆண்டு அறிக்கை இப்போது வெளியிடப்படலாயிற்று, இதுகாறும் தமிழ்மக்களுக்குப் பொதுவாகவும், சைவமக்களுக்குச் சிறப்பாகவும், இச்சங்கம் ஆற்றிய மகத்தான சேவை விபரங்கள் இவ்வறிக்கையிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன, சங்கத்தின் பணநிலைமை சம்பந்தமாகவும் அறிக்கை குறிப்பிடுவதாவது:

அங்கத்தவர் கையொப்பப் பணமாகவும், நன்கொடையாகவும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்கு 1944-ம் வருடம் 26,562 ரூபாவும், 1945-ம் வருடம் 42,771 ரூபாவும் கிடைக்கப் பெறுள்ளன. இதற்கு முன் 1943-ம் வருடம் பெற்றபணம் 32180 ரூபாவாகும். ஒரேயொரு வருடத்தில் இச்சங்கம் எப்போதாவது சேகரித்த பணம் 42,77 ரூபாவாகும் (1945). அங்கத்தவர்களைப் பன்மடங்கு கூட்டுவதிற் சங்கம் சிரத்தை காட்டி யுழைத்தமையாலேயே இவ்வளவு பணம் சேகரிக்கப்படலாயிற்று. இச்சங்க வித்தியாசாலைகளின் ஆசிரியர்களதும் ஆசிரியகலாசாலை மாணவர்களதும் நன்முயற்சியாலுமே இது பெரிதும் சித்தியடைந்த தெனலாம். அங்கத்தவர்தொகையைக் கூட்டியதன் பேருக 18,00 ரூபா சேர்க்கப்பட்டது 1944-ம் வருடத்தில் அங்கத்தவர் தொகை அதிகரித்தமையால் வந்த பணம் 7,000 ரூபாவாகும்.

ஆசிரியர்களின் சம்பளத்தோடு சேர்ந்து அரசினர் உதவி நன்கொடைப் பணமாகக் கிடைத்த தொகை நாலரை லட்சம் ரூபாவாகும்.

1944-ம் வருடம் புதிய வித்தியாசாலைகளின் ஆசிரியர்கட்குச் சம்பளமாகக் கொடுத்தபணம் 9,668ரூபா 1945-ம் வருடம் கொடுத்தபணம் 10,689 ரூபா. இதற்கு முன்னர் 1943-ம் வருடம் இவ்விதமாக ஏற்பட்ட செலவு 5179 ரூபாவாகும் இவ்வருடத்திலே தளபாடங்கள், நிலம், புதிய கட்டடங்கள் என்பனவற்றிற் செலவான பணம் 15,442 ரூபாவாகும். 1944-ம்வருடம் செலவான தொகை 360364 ரூபாவாகும். இதற்கு முன்னர் 1943-ம் வருடம் இவ்விதமாக ஏற்பட்ட செலவு 13,411 ரூபாவாகும். அநாதைப் பிள்ளைகளின் ஸ்தாபனத்தைப் பரிபாலித்தற்பொருட்டு இச்சங்கத்தினர் 1945-ம் வருடம் 3000 ரூபாவும், 1944-ம் வருடம் 5000 ரூபாவும் செலவு செய்தனர் இந்த ஸ்தாபனத்தில் 1945-ம் வருடம் 35 பிள்ளைகளும், 1944-ம் வருடம் 49 பிள்ளைகளும் வசிப்பாராயினர். விடுதிச் செலவுக்காக இப் பிள்ளைகளிடமிருந்து பணம் பெறுவதில்லை. புதிய பிரமாணப்படி அரசினர் உதவி நன்கொடைப் பணம் பெறவும் இப்பிள்ளைகள் உருகால்லாதவராயினர்.

அரசினர் நன்கொடைப் பணம் பொது மக்கள் அளித்த நன்கொடைப்பணம் என்பனவற்றிற்கு மேலாக இச்சங்கத்தினர் 1944-ம் வருடம் 18,066 ரூபாவும். 1945-ம் வருடம் 2,24,803 ரூபாவும் செலவு செய்திருக்கின்றனர். அதற்குமுன் 1943-ம் வருடம் மிகுதியாக ஏற்பட்ட செலவு 167,091 ரூபாவாகும்.

இன்னும் அரசாங்கபாடசாலைகள் விஷயமாக ஷை அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.

வடஇலங்கையில் அரசினர் வித்தியாசாலைகட்கு ஏற்படுஞ் செலவிற் பன்மடங்கு குறைவாகவும் அவைகளினும் அதிகம் திறமையாகவும் சைவசமயிகளால் வித்தியாசாலைகள் நடத்தப்படுகின்றன. அரசினர் வித்தியாசாலைகள் மாணவரின் ஆரம்ப சக்தியை முற்றாக அழித்துவிடுகின்றன, அத்துடன் தமது அலுவலைத் தாமே செய்யவேண்டுமென்ற முறையையும் இல்லாமற் செய்கின்றன. ஒரு குறித்த இடத்தில் வித்தியாசாலை யொன்று அவசியமெனின் அதை ஆரம்பிக்க அரசினர்க்கு அதிககாலம் தாமதமாகின்றது. மேலும் எல்லா வித்தியாசாலைகளும் அரசினர் பொறுப்பில் வரின் ஆசிரியர் தேசத்தொண்டில் ஈடுபட்டு நாட்டிற்காக உழைக்கவும் இடலாதவராய் விடுவர். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 30 ஆசிரியர்கள் அங்கத்தவராக விருக்கின்றனர். இலங்கையிலும் பழைய சட்டசபைகளிலும் இப்போதைய அரசாங்கசபையிலும் ஆசிரியர்கள் இடம்பெற்றிருக்கின்றனர். நகரசபைகள் பட்டினசங்கங்கள், கிராமச் சங்கங்கள் முதலிய ஸ்தாபனங்களில் அங்கத்துவம் பெற்றவரும் பெறுபவரும் அநேகராவர். சென்ற சில காலமாக நியாயதுரந்தரர் மாத்திரமே நீதிபதிகளாக நியமிக்கப்படும் உரிமையுடைய ரென்ற பிரமாணம் அனுட்டானத்துக்கு வந்தபின் நியாயதுரந்தரர்களுக்கிடையில் சிறந்த அரசியல்வாதிகள் காணவியலாதாய்விட்டது. நியாயதுரந்தரர்கள் நீதிமன்றங்களிற் பெறும் நோக்குடன் நல்ல பிள்ளைக ளென்று நியம

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாச் சமயங்களும் ஒன்ருமோ?

(திரு, சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை)

"வைதிக சைவசித்தாந்த சண்ட மாருதம்" என்று பெரும்புகழ் படைத்த ஸ்ரீ சோமசுந்தர நாயகர் என்னுஞ் சைவப்பிரசாரணர் சென்னையில் 50 ஆண்டுகளுக்கு முன் விளங்கியவர். சைவத்தின் ஏற்றத்தைக் கூறும் பல வசனநூல்களை இயற்றியவர். அக்காலத்தில் நிகழ்த்த பல சமயபிணக்குக்களை நீக்கிச் சைவத்தை நிலைநாட்டியவர் நல்லசாமிப்பிள்ளை, சுவாமி வேதாசலம் முதலிய சித்தாந்த சைவர்களின் ஆசிரியர் இப்பெரியார் சமரசத்தைப்பற்றி எழுதியுள்ள பாகங்களை எல்லோரும் படித்து உண்மையைக் கடைப்பிடிக்கும்படி இங்கே எடுத்துக் காட்டுகின்றேன்:—

சீவர்கள் பலரும் கடவுள் ஒருவரும் உளராகு முண்மையால் அக்கடவுள் சிவபிரானென்பது பெறப்பட்டு அவரை வழிபடும் பலரும் சைவர் எனப்படலாயினர் அவரை வழிபடற்கு உரிய பரிபாகிகள் அல்லாதார் புண்ணியம் வழிவிடாதபோது என்ன செய்வார்கள்? சிவபிரானை வணங்கும் பெரும் புண்ணிய மில்லாரினும் அவரவர்க்குற்ற புண்ணியத்திற்கேற்ப அவரவர் பலவகையான வழிபாடுகள் செய்வது உலகப்பிரசித்தம். அவ் வழிபாட்டிற்குச் சிவனையன்றி வேறு கடவுள் காணுமையால் சிவனை வழிபடும் மார்க்கத்திற் பெறப்பட்ட தத்துவ பேதங்களில் ஒவ்வொன்றையே அம்முழுமுதற் கடவுளெனக் கொண்டு வழிபடாகிற்பர். பிருதிவி முதல் நாதம் ஈருகச் சொல்லப்பட்ட கருவிகள் முப்பத்தாறனுள் அடங்கும் ஒவ்வொரு தத்துவத்தையே ஒவ்வொருவரும் பொருளெனக் கருதி வழிபடுங்கால், அவ்வவ் வழிபாட்டிற் பரிபாக முதிர்ந்து ஒவ்வொன்ருகக் கடப்பரென்பது உண்மை, ஆதலால் யாவும் உபகாரத்தமைந்த சாதகசாத்திய வழிபாடுகளேயாம். ஆங்காங்கு அவரவர்போன்று இருந்து அருள்புரிவது சிவபிரானே என்பது

"யாதொரு தெய்வங் கொண்டீரத்
 தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனர் தாம் வருவர்"

என்னுந் திருவிருத்தத்தாற் றெளியலாம். நம் சைவத்திற் பெறப்படுந் தத்துவங்களையே தெய்வமெனக் கொண்டு விவகரிக்குங்கால் அவரை மறுக்கத் தொடங்கும நம்மவர் அவை தத்துவங்களே யன்றிக் கடவுளல்லவென்று மாத்திரம் கூறல் அமையுமன்றி, அவர்கள் கடவுளர்களாகக் கொண்ட தத்துவங்களை இல்பொருளாக நாட்டுவது எப்படி முடியும்? அவை இல்பொருள்களாயின் அவற்றை அங்கமாகவுடைய நம் சைவமும் இல்பொருளாய் முடியுமன்ருே? ஆகவே எல்லா மதங்களுஞ் சீவிக்கவேண்டுமென்பது அமையும். ஆயின் நமது ஆசாரிய சுவாமிகள் புறச்சமயங்களைக் கண்டித்தார்களென்பது யாதெனின் அவ்வவற்றிற்குரிய தாழ்வுகளைக் காட்டினர்களென்பதேயாம்.

யானை ஒன்றை அறியவிரும்பியகுருடர் அதன் செவியே யானையெனவும் வாலே யானையெனவும் காலே யானையெனவும், பலவாறு மருண்டுரையாடல்போல், தத்துவங்களில் ஒவ்வொன்றையே மெய்ப்பொருளெனக் கருதுவோரைக் கடியும்போது, செவி முதலியன யானையன்றெனக் கடிவதுபோல் தத்துவ சமூகங்கள் பொருளாகா என்று கடிவது மாத்திரமே அமையும், செவி முதலியவற்றை இல்பொருள்களாகக் கடிந்தால் அவ்வுறுப்புகளை யன்றி யானையென் றொரு முதல் காணப்படாததுபோல் தத்துவங்களைப் பொருளெனக் கொண்டு இயங்குஞ் சமயங்களை இல்பொருள்களெனக் கழிப்பின் அவற்றை விட்டுச் சைவமென்று ஒரு மார்க்கம் தனித்து நில்லாதென அறிக. இதனால் கடவுள் ஒருவரே எனவும் அவர் சிவபெருமானே யெனவும், அச்சிவ சம்பந்த மார்க்கம் சைவமொன்றே யெனவும் வேறுமார்க்கம் கிடையவே கிடையாது எனவும் உண்டென்பது சைவத்திற் போந்த தத்துவப் பகுதி மாத்திரமெனவும் நிச்சயிக்கப்பட்டது. அன்றியும் ஒருவன் தான் வசிப்பதற்குக் கட்டிய வீட்டில் அவனுடைய உபயோகத்திற்காக ஸ்நானஞ் செய்யும் இடம், பூசை செய்யுமிடம், உணவு கொள்ளுமிடம், படுக்கும் இடம், கச்சேரி இடம் முதலிய பல இடங்கள் அமையுமிடத்து அந்தந்த இடத்தையே தனித்தனி முழு வீடென்று ஆங்காங்கு மயங்கிக் கூறும் மதியினரைக் கடியுங்கால் அவற்றை இல்பொருளாகக் கூறுவது எங்ஙனம் அமையும்? இதனையே நமது சமயாசாரிகள் செய்தனர்.

ஆன்மாக்களுடைய கன்மம் பல்வேறு வகைப்பட்ட உண்மையால் அவரவர் கன்மத்துக்கேற்பப் பல்வேறு வழிபாடுகள் அவசியமாயின. ஆகவே எல்லா மதங்களும் எந்தக் காலத்திலும் சீவிக்கும் என்பது பெறப்பட்டது. அப்படிச் சீவிக்கும்போது ஆன்மாக்களுடைய கன்மத்தின் பலன் எவைகளிற் சேரவழிவிடுமோ அவ்வச்சமயங்களே ஒவ்வொரு காலங்களிலுந் தலையெடுத்து விளங்கும் யாவும் தலையெடுத்து நிற்பது கொண்டு எல்லாம் சமமரியாதையுடைய மார்க்கமெனவாவது உண்மையைப் பயக்கும் மோட்ச மார்க்கமெனவாவது கருதுவது தவறு: ஏனெனில் சமத்துவமுடைய இரண்டு பொருள்கள் கிடைபவே கிடையா. ஒரே சாதியான இரத்தினக் குவியலில் தேர்ந்த மணியொன்றே பொறுக்கி யெடுக்கலாமன்றி அதற்குச் சமானமான மற்றொரு மணியையும் காண்பது கூடாது. இரத்தின பரீக்ஷை அறியாதார் குருட்டுக் கல்லொன்றையும் விலையுயர்ந்த மணியாக ஏன் மயங்கிக் கூறமாட்டார்கள்? அப்படிக் கூறுவதனுல் அக்குருட்டுக் கல் உயர்வொப்பில்லாத மணியோடு எப்படிச் சமத்துவம் பெறும்? முன் குருட்டுமணியை உயர்வாக மதித்த பரீக்ஷகனே இரத்தினப் பரீட்சையிற் தேர்ச்சி பெற்ற பிறகு அது குருடென்று ஏன் கழிக்காமற் போவான்? உயர்ந்த மணியின் அருமை அறியாது அது சாமானிய மணியெனப் புறக்கணித்த ஒருவனே அதன் உண்மையை அறிந்தபின் அதுவே உயர்ந்த மணியென்று அதனை ஏன் கொள்ளாமற்போவான்? இப்படியே பரிபாக உயர்வு தாழ்வுகளால் உயர்ந்த சமயத்தை மேம்பட்டதெனவும், தாழ்ந்த சமயத்தைக் கீழானதெனவும், மேலானதைத் தாழ்ந்ததெனவும், கீழானதை உயர்ந்ததெனவும் பலவாறு உலகங் கொண் டியங்குகின்றது. இவ்வுண்மையை நன்கறியாது எல்லாச் சமயங்களும் ஒரே சமத்துவமுடையன வெனவாவது எல்லாச் சமயங்களும் இல்லாமற் போய்விடவேண்டுமெனவாவது கூறுவது சரியன்று.

சமயமென்பது காலமென்று விளங்கும். காலமென்பது பருவமென்று அமையும். இதனுல் சமயங்களென்பது பருவங்களெனப்படும். பூசா சமயம், போசன சமயமென வழங்கப்படுவதை நோக்கவும். அப்படியே நித்ய சமயம் அனுஷ்டான சமயமென்னும் சொற்றொடர்கள் காலத்தையே குறிப்பதைக் காணலாம். பருவம் சமயம் காலம் என்பவை ஒருபொருள் குறிப்பனவாம். இதனுல் சமயமென்பது காலத்தில் வேறுபடாமல் பருவத்தையே காட்டுவதொன்ரும். சைவசமயி என்னுந் தொடர்மொழி சிவனை வழிபடுஞ் சமயத்தை யுடையவனென்று கால நிகழ்ச்சியைக் காட்டி அவனுடைய பருவத்தையே விளக்குவதாயிற்று இப்படியே விஷ்ணுவை வணங்குஞ் சமயம் பிரமனை வணங்குஞ் சமயமென்று காலங்களைக் காட்டிப் பருவத்தையே வெளிப்படுத்துமாயிற்று. ஆதலின் சமயமென்பது பருவமென்றே தீர்மானிக்கப்பட்டது. உலகாயதம்; பௌத்தம், சைனம், சாங்கியம், பாட்டம், பிரபாகரம், மாயாவாதம், பாஞ்சாரத்திரம், சைவமென்று பரிபாகத்தைப் பயப்பனவாகிய மார்க்கங்கள் சமயங்களென்னும் பெயர்களாற் பிரகாசித்தலால் உலகாயதன் என்னும்போது பூத மிச்சிதமத்தாலாகிய உலகமே பொருளென்று மதிக்கும்போது பருவத்தை யுடையவனென்றும், பின்னர் பௌத்தன் என்னும்போது மேற்பருவங்கடந்து புத்தியே பொருளென்று மதிக்கும் பருவத்தையுடையவனென்றும், இப்படியே பருவங்களை ஒவ்வொன்ருகக் கடந்து முறையே மேற்காட்டிய ஒவ்வொரு சமயங்களிலும் நின்று அவ்வவற்றைப் பொருளென மதிக்குங்கால் அவ்வப் பருவங்களை யுடையவனென்றும் அமையப்பெறுதல் சத்தியம்.

இப்படிப் பருவ பேதப்பட்டு வருந் தன்மையாற்ருனே சமயங்கள் அதிகரிக்கலாயின, சமயங்கள் பலவாகி அவ்வச் சமயங்களிற் போந்த போக நுகர்ச்சியைப் பெற்று வாழ்வான் சேதனன் ஒருவனே, யாகையால் அவன் ஒவ்வொரு சமயத்திலும் பிரவேசித்தே தீரவேண்டுமென்பது ஒப்பமுடிந்த நியாயம். இந்தக்கொள்கை வேதத்தையநுசரிக்கும் எல்லாச் சமயிகளுக்கும் உடன்பாடாம். இந்த உண்மையால், ஒவ்வொரு சேதனனும் எல்லாச் சமய நுகர்ச்சியும் பெற வேண்டிய சந்தர்ப்பங்களில் அவ்வச் சமயங்களில் அவன் பிரவேசித்திருக்கிறபோது அவனுக்கு அதிலுள்ள போகத்தை ஊட்டித் தொலைப்பிக்கும் நிமித்தம் அதுவே உயர்ந்ததென்றும், மற்றவை அதனினும் தாழ்ந்தவையென்றும் வற்புறுத்திக் கூறும் உண்மை உபகாரமாதல் வெளிப்பட்டது.

சித்தாந்தம் என்பது முடிபு என்று பொருள்படும். முடிபு எனவே தனக்குமேல் ஒரு கொள்கையும் இல்லாதது என்று பெறப்பட்டது. இம் முடிபு எங்கே பெறப்பட்டதெனின், சிவாகமத்தில் என்று கூறலாம். சிவாகமத்தில் பெறப்பட்ட முடிபே முடிபெனவும் அதுவே சித்தாந்தமென அதற்கு மேற்பட்ட சித்தாந்தமொன்று இல்லையெனவும் வெளியாயிற்று, இந்த உணர்ச்சியால் சித்தாந்தம் என்பது ஆகம முடிவு என்று நிச்சயிக்கப்பட்டது. ஆகமாந்தமெனினும் சித்தாந்தமென்னும் ஒக்கும். ஆகமாந்தமாகிய சித்தாந்தமே சைவமெனவும் படும். எனவே சைவத்தின் மேற்பட்ட சமயமொன்று இன்றென நாட்டப்பட்டது.

"சைவசமயமேசமயம்", "சைவத்தின் மேற்சமயம் வேறிலை" என்னும் வாக்கியங்களைக் காண்க.

## சைவ வித்தியாவிருத்திச்சங்கம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

யப் பகுதித் தலைவருக்குத் தம்மைக்காட்டுவதில் கண்ணுங் கருத்தாகவும் நிற்கின்றனர், அரசியல் விவகாரங்களில் அக்கறை காட்டுகின்றிலர்! அப்படியாகவே வித்தியாசாலை ஆசிரியர்கள்தான் அதிக அக்கறையுடன் அரசியலில் ஈடுபட்டு உழைக்க வேண்டியவராகின்றனர். தேர்தற் காலங்களில் பொதுசனங்களை வழிகாட்ட வேண்டியவ ராகின்றனர். இப்படியிருக்கையில் எல்லா வித்தியாசாலைகளும் அரசினர் பொறுப்பில் இருக்குமாயின் ஆசிரியர் அரசியல் விஷயங்களிற் கலந்துகொள்ளக் கனவிலும் நினைக்கவியலாதாய்விடும். இப்பொழுது ஆசிரியர்கள் அல்லது வித்தியாசாலை அதிபர்கள் செய்யும் அரசியற் ெருண்டுகளை வித்தியாகர்த்தராவது கல்வி மந்திரியாராவது தடுக்கச் சிறிதும் அதிகாரம் பெற்றிலர்.

யாழ்ப்பாணத்தில் இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர் வித்தியா பகுதியில் கடமை பார்த்த ஓர் உயர்ந்த உத்தியோகத்தரின் உதவியால அவரின் நெருங்கிய உறவினரொருவர் தேர்தலில் வெற்றியடைந்து சட்டசபையில் ஸ்தானம் பெறுவாராயினர். கல்விகற்றுக் கொடுக்கும் அதிகாரம் அரசினர் கையில் இருக்குமாயின் அதனுல் வருந்தீமைகள் மிக வதிகமாய்விடும். ஒரு பகுதியினர் பொறுப்பிற் கல்வி விருத்தி விடப்படின், அதனுலும் அதிஷ்டம் வந்துசேரும் கல்விவிருத்திக்காகப் பௌத்தர்கள், சைவசமயிகள், முஸ்லீம்கள் செய்ய ஆமத்தமாயிருக்கும் தரும கைங்கரியங்களை அரசினர் அவம்பாக விடப்படாது. அரசினர் வித்தியாசாலைகளும் உதவிநன்கொடைப் பணம் பெறும் வித்தியாசாலைகளும் குறைவின்றி எங்கும் இருந்துவர விடலாமே. அப்படி யிருப்பின் இவைகட்குள் கல்விவிருத்தியில் போட்டி யேற்பட்டு இலங்கைத் தேசம் விரைவிற் கல்வியிற் சிறந்தநாடாக மேனிலையடைய இடமுண்டாகும்.

## ஜனுப் ஆஸப் அலி

இப்போது இந்திய இடைக்கால அரசாங்கத்திலே போக்குவரத்துப் பகுதி மந்திரியாகவுள்ளவரும், பிரபல காங்கிரஸ் வாதியுமாகிய ஜனுப் ஆஸப் அலி, அமெரிக்காவிலே இந்தியாவின் ஸ்தானிகராக நியமிக்கப்பட் டிருக்கிருர்.

### அப்பிள் பழங்கள்

நத்தார்க் கொண்டாட்டத்திற்காக ஆஸ்திரேலியாவி லிருந்து 6 லட்சம் அப்பிள் பழங்கள் கொழும்பில் இறக்குமதியாகும்.


**India Super Tyres and Tubes**

**இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்**

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந்உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால்
தேவையானதற்கு இப்பொழுதே உங்கள்
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

—28-2-47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான வெற்றி!

## உலக மகாநாட்டில் இந்தியாவுக்கு ஜெயம்

தென் ஆபிரிக்காவிலே இந்திய மக்களை அங்குள்ள வெள்ளையரசாங்கம் அக்கிரமப்படுத்துவது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்து அரசியல் நிருவாகசபை ஓர் தீர்மானம் நிறைவேற்றியது ஞாபகமிருக்கலாம் அதாவது, தென் ஆபிரிக்கா, இந்தியா என்னும் இரு நாடுகளும் தமக்கிடையே உள்ள வேற்றுமைகளை ஒழித்துச் சமாசத்திற்கு வந்து, அதனைப் பின் இந்தஸ்தாபனத்துக்கு அறிவிக்க வேண்டும் என்பது. இது இந்தியாவுக்கு ஓர் மகத்தான வெற்றி தென் ஆபிரிக்காவிலே நிறத் துவேஷத்தை ஆதாரமாகக் கொண்ட அநீதிகள் விளக்கப்படுகின்றன என்பதைக் குறித்த நிருவாகசபை தனது தீர்மானத்தால் ஏற்றுக்கொள்ளுகிறது

அரசியல் நிருவாகசபை இப்படித் தீர்மானித்தாலும், அது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப் பொதுச் சபையிலே நிறைவேறவேண்டும். அதுவும் மூன்றில் இருபங்கினர் அதற்குச் சாதகமாக வாக்களித்தால்தான் அதுசெல்லுபடியாகும். எத்தனையோ நாடுகள் உள்ள ஸ்தாபனத்திலே, நிறத்திமிர் பிடித்த வெள்ளையர் நாடுகளும் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் பிரிட்டிஷ்-அமெரிக்க நாடுகளும் சேர்ந்துள்ள இப்பொதுச்சபையிலே, எப்படி இந்தியாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்படப்போகிறது என்று உலகோர் கவலைப்பட்டிருந்தனர். இவ் விஷயம் நேற்றைத் தினம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப் பொதுச் சபையில் விவாதிக்கப்பட்டது.

இந்தியப் பிரதிநிதியாகிய ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி நேற்றுத்தான் தான் பாரதேவியின் புதல்வி, வீரன் ஜவஹர்லாலின் சகோதரி, அரசியல் ஞானி மோதிலால் நேருவின் புதல்வி என்பதை அகில உலகுக்குங் காட்டி, வீரம் செறிந்த, உணர்ச்சி மிகுந்த ஓர் பிரசாரணம் செய்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், அமெரிக்க முதலாளித்துவமும் இவ்விஷயத்தில் அநுட்டித்து வரும் வழவழாக் கொள்கையைக் கண்டித்தார். தென் ஆபிரிக்காவிலே வெள்ளையர் அக்கிரமத்தை மனமுருக எடுத்துரைத்தார். ஸ்மட்ஸ் சேனாதிபதி தனது கட்சியைக்கூறினார்

ஈற்றில் வாக்கெடுப்பு நிகழ்ந்தது. இந்தியாவுக்குச் சார்பாக 45 நாடுகளும், பாதகமாக 10 நாடுகளும்தான் வாக்களித்தன. இந்தியாவுக்கு ஓர் மகத்தான வெற்றி ஏற்பட்டது. இவ் விஷயத்தில் ருஷியப் பிரதிநிதிகள் இந்தியாவுக்காக ஆற்றிய வேலைகளை எவரும் மறக்கமுடியாது.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி இந்த விவாதத்திலே பிரிட்டிஷ் இராஜதந்திரிகளுக்குக் கொடுத்தசூட்டினை அவர்கள் தம்சீவியபரியந்தம் மறக்கமுடியாது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றும், அந்த ஏகாதிபத்தியத்திலே சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் தாண்டவமாடுகின்றன என்றும், பலபடக் கூறித் தம்பட்டமடிக்கிறீர்கள். ஆனால் இந்த ஏகாதிபத்தியத்திலேயிருந்த, உங்கள் பரிபாலனத்திலே பன்னெடுங் காலமாக இருக்கும் இந்தியமக்களை, உங்கள் சொந்த ஏகாதிபத்திய வாதிகள் ஹிம்சைப் படுத்துவதைக் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டும் இப்படிப் பாராமுகம் சாதிப்பதும் மனித தன்மையாகுமா என்று ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பிரிட்டிஷ் இராஜதந்திரிகளை அந்த உலக சபையிலே கேட்டபோது அவர்கள் வெட்கித் தலைகுனிந்திருக்க வேண்டும்.

## அப்பர் கண்ட ஐயாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈண்டுக் கூறிய அப்பர் பெருமானுடைய வரலாற்றின் ஒரு பகுதியிலிருந்து அறியக்கூடிய செய்திகள் சிலவற்றை ஆய்ந்து காண்போம்:—

கயிலை காணச்சென்ற சொல் வேந்தரைத் தடுத்தாண்ட இறைவன் ஆண்டே கயிலையில் வீற்றிருக்குங் கோலத்தைக் காட்டாமல் ஐயாற்றிற் காணென வகுத்தது, "மீண்டும் அப்பர் புவியின்மேல் தீந்தமிழ் வழுத்த" எனப் பெரியபுராணத்திற் கூறப்பட்டுள்ளது. அது மிகவும் பொருத்தமேயாம்: நாடு உய்யவும், நற்றமிழ் கேட்கவும் நற்றொண்டர்களை இறைவன் தடுத்தாண்டு தமிழ்நாட்டில் உய்ப்பதைச் சுந்தரர் முதலிய மூவர்வரலாற்றினும் உய்த்துணர்க.

மேலும் கயிலைசென்று இறைவனை நேரே கண்டவர் மீண்டும் ஈண்டு வாராராதலானும், பரமன் கயிலையில் வீற்றிருக்குங் கோலமொன்றையே அப்பர் காண விரும்பினாராதலானும், தொண்டர் பெருமையை உலகினர் அறிந்துய்ய, இறைவன் திருவுளங் கொண்டதாலும், அருந்தொண்டாற்றிய அப்பர் தம்மைக் கயிலையில்காண இனி கால்வருந்தி நடந்துவர வேண்டாமென்னுங் கருணையாலும்,ஐயாறு பண்டே மிகச்செய்த பாக்கியத்தாலும், கயிலை வள்ளல் மலையினிடையே முனிவராய்த் தோன்றி மறைந்து அசரீரி மொழிந்த ஆண்டே காட்சியளிக்காமலும், கயிலைக்கு அழைக்காமலும், அப்பருக்குப் பொன்னொளிரும் நல்யாக்கை அளித்துப் பொய்கையில் மூழ்கி எத்தகைய வருத்தமுமின்றி ஐயாற்றில் ஒரு பொய்கையிலெழுந்து தம்முடைய கயிலைத் திருக்கோலக்காட்சியைக் காண அருள் புரிந்தார் எனக் கொள்ளுதல் பிழையாகாது.

அப்பர், காலால் நடவாமல் நீருள் மூழ்கி ஐயாறடைந்த செய்தியை "யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது" என்ற தமது வாக்கால் குறிப்பித்துள்ளார் இறைவன் திருவடியினையும் காண்டற்கரிய கயிலைக் கோலத்தையும் தாம் கண்டுகளித்ததை நாவரசர் "காதல் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன், கண்டே னவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்ற அடிகளால் தெரிவித்துள்ளார். "எல்லா உலகமும்" என்ற தாண்டகத்தில் 'புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே' என்ற தொடரால் குறித்து அத்திருவடியின் பெருமைகளையெல்லாம் "சிந்திப்பரியன" என்று தொடங்கும் திருவிருத்தப் பதிகத்தின்கண்ணும் பிறவிடத்தும் விரிவாக விளக்கியுள்ளார். அப்பாடல்களை யெல்லாம் பலகால் படித்து இன்புறவேண்டும்

இவ்வரலாற்றுப் பகுதியால் நாம் அறிந்துகொள்ள வேண்டிய சிறந்த உண்மை யாதெனில் 'ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால், மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்ற அப்பர் பெருமானுடைய இறையன்பையும் உறுதிப்பாட்டையும் நாமும் கடைப்பிடித்து இறைவனிடம் மெய்யன்பு செலுத்தி உறுதியுடன் தவறாது தொண்டுசெய்து அவனருள் பெறவேண்டும் என்பதேயாம்.

—ஞானசம்பந்தம்

---

இச்செய்தி பண்டிதர் ஜவஹர்லாலுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் உடனே தன் சகோதரிக்கும், ஏனைய பிரதிநிதிகளுக்கும் பாராட்டுச்செய்தி ஒன்று அனுப்பினர். ஐக்கியதேச ஸ்தாபனம் ஓர் விகட நாடகமல்ல; அங்கே நீதி,நியாயம் என்பன வழங்கப்படும் என்ற நம்பிக்கை இனி எனக்கு உண்டு என்று அச்செய்தியில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துணைவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

அன்ன தன்பின ருமையவ ளெனதுபா லமலன்
றன்ன ருட்பெறு மதலைதோன் றுவகை தடுத்த
பொன்ன கர்க்கிறை விரிஞ்சன்மான் முதலபுத் தேளிர்
பன்னி யர்க்கெலாம் புதல்வரின் றுகெனப் பகர்ந்தாள்

அங்ஙனந் தெரிந்த பின்னர் உமாதேவியார் இறைவருடைய பூரண அநுக்கிரகத்தைப் பெற்ற குழந்தை எம்மிடத்தில் தோன்று வண்ணம் தடைசெய்த இந்திரன், பிரமா முதலிய தேவர்களுடைய மனைவியரிடத்தெல்லாம் பிள்ளைகள் பிறவாதொழிக எனக் கூறினர் என்பது கருத்து.

[இங்கே உமாதேவியார் தேவர்கள தம்மிடத்துப் புத்திரன் தோன்றுவகை தடுத்தாரே ஆதலினால் தேவர்களுடைய பன்னியரிடத்துப் புதல்வரின்றுகெனக் கூறியது பொறாமையினா லன்று பின் எதற்கெனின், தாம் தீக்கு வெம்மைபோல் சிவத்தோடு அபேதமாக விருத்தலை யுணராது இத்தேவர்கள் தம்மையும் சிவத்தையும் பேதப்படுத்தி நினைத்து, 'நிமலவோர் குமரன்றன்னை நீதரல் வேண்டும் நின்பால்" எனக் கேட்ட அறியாமையை அத்தேவர்களிடத்து ஒழிக்கும் வண்ணஞ் செய்த மறக்கருணை யென்க.] (3)

இமய மாமக ளித்திறம் புகன்றுமீண் டேகிச்
சமயம் யாவையு நிறுவிய கண்ணுதற் றலைவன்
அமல மாந்திரு முன்னர்வந் தரிகருமுன் னரிதாங்
கமல மாரடி கண்டனள் பணிந்து கண் களித்தாள்

பருவதவர்த்தனியார் இங்ஙனஞ் சபித்து மீண்டுசென்று எல்லாச் சமயங்களையும் (அந்த அந்த உயிர்கள ஈட்டிய வினைப்பயனுக்கு இயைய உலகில்) நிறுவிய நெற்றிக்கண்ணை யுடையவராகிய கைலாசபதியின் தூய முன்னிலையிற் சேர்ந்து திருமாலும் முன்னர் (ஏனமாகிக்) காண்டற்கரிய செந்தாமரைப் பூப்போன்ற திருவடிகளைத் தரிசித்துப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி அத்தரிசனத்தால் கண்களித்தார் என்பது கருத்து.

இந்நூலாசிரியராகிய ஆசாரிய சுவாமிகள் இப்புராண ஆரம்பத்திலே தேவிக்கு வணக்கம் கூறுமிடத்து ".... .... அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய இறைவி .... ...." எனக்கூறி, இங்கே " .... சமயம் யாவையும் நிறுவிய கண்ணுதற் றலைவன்" எனப் பெருமானுக்கு அடைகொடுத்துக் கூறியமை முரணாகாதோவெனின், சிவத்துக்கும் சத்திக்கும் பேதமின்மையால் அது முரணாகாதென்க; இறைவனுடைய திருவருள் வழிநின்று இறைவி இவற்றைச் செய்கிறாளென்பதே கொள்கை; மேலும் இறைவியே சமயங்களை யாக்கினாளெனப் பலவிடத்துங் கூறப்பட்டிருத்தல், உலக மாதாவாகிய ஈசுவரி அவ்வவ் வான்மாக்களின் பக்குவத்தை யுணர்ந்து அவ்வப் பக்குவத்திற்கு ஏற்ற சமயங்களில் ஆன்மாக்களை ஒழுக வைப்பவளென்பதாம்; தந்தையானவன் தன்னுடைய விரகறியாத குழந்தை தவழ்ந்தேனுங் குறுநடை நடந்தேனும் சென்று தம்முற்றத்திலுள்ள புழுதியையேனும் சேற்றையேனும் அள்ளித் தன்னுடம்பிற் பூசி, இன்னும் பக்கலிற் கிடக்கும் அசுத்தமான பொருள்களை யெல்லாம அளைந்து தன்னை அசுத்தமாக்கிக் கொண்டிருக்கும்போது, காண்பரேல், அத்தந்தையானவன் அக்குழந்தையைத் தான் எடுத்துக் கழுவிச் சுத்தஞ் செய்வதை விடுத்து, உடனே தன் மனையாளை (அக்குழந்தையின் தாயை) விளித்து "இங்கே பார். நீ பராமுகமாக விட்டபடியினாற்றான் குழந்தை சேறுபூசித் தன்னுடம்பை அசுசிப்படுத்திக்கொண்டிருக்கிறான், ஆனதால் இவனை எடுத்துக் கழுவித் துடைத்துக் கொண்டு வா' என்று பணிக்க, பெற்றவள் விரைந்து சென்று குழந்தையை, அதனுடம்பிலுள்ள அசுத்தத்தையும் பொருட்படுத்தாது எடுத்துக் கழுவித் துடைத்து நெற்றியில் விபூதிபூசிப் பொட்டிட்டு, தலையிலுள்ள மயிரையும் சீர்ப்படுத்திக்கொண்டு போய்த் தகப்பனிடங் கொடுக்க, அத்தகப்பன் அப்பொழுதுதான் "இங்கே வாடா என் கண்மணியே" என்று இரு கரங்களையும் நீட்டித் தாயிடமிருந்து குழந்தையை வாங்கிக் குழந்தையின் உச்சியிலும் கன்னத்திலும் முத்தமிடுவான்; இது உலக இயல்பு; இதுபோல, உலக மாதாவாகிய ஈசுவரி, பரிபக்குவமுறாது மலத்தினாற் பந்திக்கப்பட்டிருக்கும் ஆன்மாக்களைப் பலவகைச் சமயங்களிலும் புகுத்திச் சோபான முறையேபரிபக்குவமாக்கி இறைவன் முன்னிலையில் விட, பரமபிதாவாகிய இறைறவன் தன் குழந்தைகளாகிய உயிர்களுக்கு அநுக்கிரகஞ் செய்வான்; உயிர்களைப் பரிபக்குவப்படுத்துதற்குப் பல்வகைச் சமயத்திலும் திருவருளாற் புகுத்துபவள் இறைவியாதலினாற்றான் 'அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய இறைவி' என்று அறிஞராற் போற்றப்படுவளென்க. அடைந்தாரைத் தூய்மையாக்கும் மகத்துவத்தோடு கூடிய சந்நிதியாதலின் "தலைவன் அமலமாந்திருமுன்னர்" என்றார்; அரிக்குமுன்னரிதாமென்பதை அரிக்கும்+உன்ன அரிதாம் எனப் பதச்சேதஞ் செய்து திருமாலுக்கும் தியானித்தற்கரிய எனப் பொருள்கொள்ளலுமொன்று: இங்கே அரிக்கும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்பு; தீப்பொறிகளின் வெம்மை பொறுக்கலாற்றாது இறைவனுடைய இடப்பாகத்தை விட்டுத் தன் திருக்கோயிலுட் சென்ற பிராட்டி, அப்பிரிவாற் சிலநேரம் தரிசியாதிருந்த இறைவன் திருவடிகளை மீண்டு சந்திக்க வந்தமாத்திரத்தே தரிசிக்கும் பேற்றைப் பெற்றாளாதலின் "கண்களித்தாள்" என்றார்.

[அரிக்குமுன்னரிதாங் கமலமாரடியென்றார், முன், விஷ்ணு பன்றி வடிவங்கொண்டு பூமியை யிடந்துந் தேடிக் காண்டற்கரிய திருவடியென் பது தோன்றுதற்கென்க.] (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் டிச 11

காலை 7-15 கிராமபோம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வானொலி வாத்யகோஷ்டி 8.30 டி பஞ்சாபகேசன் வயலின் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி பஞ்சாபகேசன் வயலின் 2 தமிழில் செய்திகள 2.05 டி பஞ்சாபகேசன் வயலின் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 சாயக்குடி ஆர் மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள 7 ஸ்ரீவள்ளி 7.20 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 8.30 சாயக்குடி ஆர் மீனாக்ஷி சுந்தரம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஐரோப்பியசங்கீதம் 9.30 லண்டனிலிருந்து 9.40 அறிவிப்புகள் வானிலை 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் டிச 12

காலை: 7-15 கிராமபோம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 காலைஇசை 8-30 எஸ் பி தில்லைராஜன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 2 தமிழில் செய்திகள 2 05 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 காளியமர்த்தன் வீணை 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 வாத்ய கதம்பம் 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 கே ஆர் குமாரசாமி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 அனுபூத்த காரணம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 காளியமர்த்தனன் வீணை 10.30 முடிவு.

### வெள்ளி டிச 13

காலை 71-5 கிராமபோம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம எஸ் மோகனம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே தங்கம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள 2-05 கே தங்கம்மாள் பாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 எம் எஸ் மோஹனம்பாள் 5-40 குரான்-ஷரீப் 6 ஆங்கிலத்தல செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 7.30 தமிழில் செய்திகள 7-45 குரும்போம் 8 திருவெண்காடு பி சுப்ரமண்யபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் கே ஸி காளிதாஸ் பாட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக விவகாரங்கள் 10 நீங்கள் கேட்டவை 10.3 ஒலிபரப்பு முடிவு.

---

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis.25 23-4-46 to 22-3-47)

---

## கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும், கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)

---

## விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

---

## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)

---

## தேவை

மானிப்பாய் ஐக்கிய பண்டசாலைக்கு ஒரு மனேச்சரும் கிளாக்கும் 1947-ம் ஆண்டு தை மாசம் 1-ந் திகதி தேவை.

மனேச்சர் சம்பளம் ரூபா 60.
கிளாக் சம்பளம ரூபா 40.

மனேச்சர் பிணைப்பணம் ரூபா 500 கட்டவேண்டியது. இந்த மாதம் 20-ந் திகதிக்கு முன் விண்ணப்பம் செய்ய வேண்டியது.

காரியதரிசி.

மா. ஐ. ப. சா.
3.12-46.
Mis 262, 6—10-12-46.

---

## உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானல்

**இந்துசாதனத்தில் விளம்பரஞ் செய்யுங்கள்**

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

### பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

### தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

### தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

### உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

### கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்,

Mis 246 20-11-46—20-11-'7 (தி)

---

வெளிவந்து விட்டது!

## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கும், ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு ஷை நூல்ஆசிரியர் அவர்கள் செய்த பல திருத்தங்களோடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்

வெளியீடாக அச்சிடப்பட்டிருக்கின்றது.

**விலை ரூபா 3**

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை.

---

## இலக்கிய வாசகம்

### மூன்றும் புத்தகம்

**நான்காம் வகுப்புப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது;**

(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

இதன் வசனபாகம்: சத்தியவிரதம் பூண்ட அரிச்சந்திர மகாராசனுடைய வரலாறு, இலகுவான இனிய செந்தமிழ் வசனநடையில் 18 பாடங்களாக வகுத்தெழுதப்பட்டுள்ளது.

செய்யுட்பாகம்: பஞ்சதந்திரத்தில் "காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதை (செய்யுள்) நீதிக் கவித்திரட்டு, சதகத்திரட்டு என்னுமிவைகள் அடங்கியுள்ளன பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை யென்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதியொன்றன் விலை சதம் 60 (அணு 10)**

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெறற்பாலன.

மனேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை.

19-11-46.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, Desember, 10, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org